# இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் 2021 -22
## பனப்பாக்கம் பேரூராட்சி
ராணிப்பேட்டை மாவட்டம்

ந.க.எண். 250 / 2021

நாள் : 31.03.2022

### மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ராணிப்பேட்டை மாவட்டம், **பனப்பாக்கம்** பேரூராட்சியில் இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிதி திட்டம் (O&M) 2021 –22 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கு தகுதி வாய்ந்த இரண்டாம் நிலை மற்றும் அதற்கு மேல் (Class II and above ) ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் **20.04.2022ம் தேதி புதன்கிழமை** பிற்பகல் **3.00** மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் இரண்டு உறை முறை மின்னனு உறையில் (E- Tender) ஒப்பந்தப்புள்ளிகள் (Two Cover System) வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **20.04.2022**–ம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் **3.30** மணிக்கு வருகை புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **31.03.2022–ம் தேதி 10.00 மணி முதல் 20.04.2022–ம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் 12.00 மணி வரை இணையதளத்திலிருந்து (e-Token - Digital Signature card)** உபயோகித்து தகவல்களை இலவசமாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் கலம் 4ல் கண்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தொகையினை செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்துபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண்.5ல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகைக்கு **“செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி ”** என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலையை (Demand Draft) முன் வைப்புத் தொகையாக இணைத்து **20.04.2022 ஆம் தேதி புதன்கிழமை** பிற்பகல் **3.00** மணிக்குள் இவ்வலுவகத்திற்கு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

ஒப்பந்தப்புள்ளிகளின் ஆவணங்களை **05.04.2022**–ம் நாள் முதல் கீழ்கண்ட இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம். https://tntenders.gov.in and http://www.tenders.tn.gov.in/ பணிகள் விபரம் கீழ்கண்டவாறு

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஷெயூல்டு தொகை ரூ | முன்வைப்பு தொகை ரூ | வேலை முடிக்க வேண்டிய கால அளவு (மாதத்தில் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | Providing Painting and Maintenance works to 60000 Litres Anniyamman Koil, 1.00 Lakh Litres Panapakkam Colony, 5.00 Lakhs Litres Subramaniyar Koil street (Old Santhai Medu ) in Panapakkam Town Panchayat | 43.00 | 10620 /– | 86000/– | 6 மாதம் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.

4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், <u>பனப்பாக்கம்</u> பேரூராட்சி என்ற முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.

5. ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்படுமேயானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

7. ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

8. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்று வேலை உத்திரவு வழங்கப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 50/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தினை ரூ. 10/– <u>பனப்பாக்கம்</u> பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

10. வேலை முடிக்கப்படவேண்டிய கால அளவு 6 மாதங்களாகும். அவ்வாறு வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க இல்லையேல் பொறியியல் கையேட்டின்படி வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.

11. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 10 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.

12. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

13. சாலை வேலைகளை பொருத்த வரையில், கட்டுமான பொருட்கள் சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

14. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் கம்பி அவரது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள வேண்டும். துறையால் வழங்கப்படமாட்டாது. இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

15. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் வேலை தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பணிகளுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தரம்வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

17. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்

18. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும் படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.

19. வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) | கூடுதல் காப்புத் தொகை | 5% |
| ஆ) | வருமானவரி | 1% |
| இ) | G.S.T | 18% |
| ஈ) | கட்டுமான தொழிலாளர் சந்தா | 1% |

20. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத்தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

21. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த அடங்கிய விளம்பரப்பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

22. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகள் முடிக்க வேண்டும்.

23. **E-Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

24. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

25. சாலைப்பணிகள் முடிவடைந்த முதலாம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான ஆவணங்கள் இப்பேரூராட்சி பொறியியில் பிரிவு அலுவலர்களிடம் சமர்பிக்கப்பட வேண்டும்.

26. **Engineering Manual** படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் **(Penalty for slow progress)** அபராதம் ஒப்பந்த மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் போக மீதமுள்ள ஒப்பந்த தொகைக்கு நாளொன்றுக்கு 0.1 % விதிக்கப்படும்

27. பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட 5 % பணி காப்பீடு தொகை, பணி முடிவுற்ற பின் 2.5% **With hold** தொகை மற்றும் பணி முடிவுற்ற பின் ஒரு வருடம் முடிந்த பின்னர் 2.5% **Retention** தொகை திரும்ப வழங்கப்படும்.

28. பணிகளின் ஒப்பந்த மதிப்பில் (Contract Value) 1 சதவிதம் முன் வைப்புத் தொகையாக (EMD) செலுத்த வேண்டும்.

29. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

30. **முக்கிய தினங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்ததரரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் (Pre-Bid Meeting) நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 13.04.2022<br>பிற்பகல் 3.00 மணி |
| 2. | ஒப்பந்தப்புள்ளிகளின் படிவம் மற்றும் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி மற்றும் நேரம் | 20.04.2022<br>முற்பகல் 12.00 மணி |
| 3. | ஒப்பந்தப்புள்ளிகளின் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் (மின்னணு மூலம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளியையும் சேர்த்து) | 20.04.2022<br>பிற்பகல் 3.00 மணி |

| | | |
|---|---|---|
| 4. | ஒப்பந்தப்புள்ளிகளின் ஆவணங்கள் திறப்பு நாள் மற்றும் நேரம் | 20.04.2022<br>பிற்பகல் 3.30 மணி |

32. மேற்கண்ட தினங்களில் எதிர்பாராமல் அரசு விடுமுறை ஏதேனும் அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற்றுக்கொள்வது மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு அடுத்த வேலை நாட்களில் நடைபெறும்.

33. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளிகளின் ஆவணங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

31/3/2022

செயல் அலுவலர்
பனப்பாக்கம் பேரூராட்சி,
ராணிப்பேட்டை மாவட்டம்.

<u>பெறுநர்:</u>
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், <u>பனப்பாக்கம்</u> பேரூராட்சி.

31/3/2022

<u>நகல்</u>

1. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், வேலூர்–9, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்–9, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. செயற்பொறியாளர், பேரூராட்சிகள் துறை, தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் துறை, வேலூர் மண்டலம், வேலூர்–9, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
6. தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் பனப்பாக்கம் பேரூராட்சி,
7. இளநிலை பொறியாளர், நெமிலி பேரூராட்சி, (தலைமையிடம்) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
8. அலுவலக விளம்பர பலகைக்கு.